பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

ஆசிரியர் அறிமுகம் 21

மூலநூல் பதிப்பாளர் முன்னுரை 34

பகுதி 1: முன்னுரை 39

தொடக்கத் துதிமொழி 41

பகுதி 2: அபூ உமாமா ﷺ அறிவிப்பின் செய்திகள் 75

அபூ உமாமா ﷺ அறிவிப்பின் ஆதாரப்பூர்வ செய்திகள் 77

பகுதி 3: அபூ உமாமா ﷺ அறிவிப்பை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் 91

அபூ உமாமா ﷺ அறிவிப்பின் ஏனைய ஆதாரங்கள் 93

பின்னிணைப்பு: தஜ்ஜால் குறித்து புகாரீ மற்றும் முஸ்லிமின் கூடுதல் அறிவிப்புகள் 159

அபூ உமாமா ﵁ அறிவிப்பின் ஆதாரப்பூர்வ செய்திகள்

❊

அபூ உமாமா ﵁ அவர்களின் அறிவிப்பிற்கு வலு சேர்க்கும் 49 நபிமொழிகளின் தொடர்கள் ஆதாரப்பூர்வமாக உள்ளன. அவற்றை இனி ஒவ்வொன்றாகக் காணலாம்.

۞ 1 ۞

يَا أَيُّهَا النَّاسُ إِنَّهُ لَمْ تَكُنْ فِتْنَةٌ فِي الْأَرْضِ مُنْذُ ذَرَأَ اللهُ ذُرِّيَّةَ آدَمَ, أَعْظَمَ مِنْ فِتْنَةِ الدَّجَّالِ

மனிதர்களே! ஆதமின் சந்ததிகளை இப்பூமியில் படைத்தது முதல் இதுவரை தஜ்ஜாலுடைய குழப்பத்தைவிட வேறு எதுவும் மிகப் பெரியதாக உண்டாகவில்லை.

۞ 2 ۞

وَإِنَّ اللَّهَ لَمْ يَبْعَثْ نَبِيًّا إِلَّا حَذَّرَ أُمَّتَهُ الدَّجَّالَ

நிச்சயமாக அல்லாஹ் எந்த நபியையும் அவர் தமது சமூகத்திற்கு தஜ்ஜாலைப்பற்றி எச்சரித்தே தவிர அனுப்பவில்லை.

۞ 3 ۞

أَنَا آخِرُ الْأَنْبِيَاءِ، وَأَنْتُمْ آخِرُ الْأُمَمِ

நான் நபிமார்களில் இறுதியானவன். நீங்கள் சமுதாயங்களில் இறுதியானவர்கள்.

۞ 4 ۞

وَهُوَ خَارِجٌ فِيكُمْ لَا مَحَالَةَ

அவன் உங்களிடமிருந்தே வெளிப்படுவான். இதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை.

அபூ உமாமா ﷺ அறிவிப்பின் ஏனைய ஆதாரங்கள்

❊

பகுதி இரண்டில் நாம் வரிசைப்படுத்திக் கூறிவந்தவற்றில் ஒரு சிலதை தவிர அனைத்துமே ஸஹீஹ் எனும் ஆதாரப்பூர்வமான நிலையிலுள்ள ஹதீஸ்கள்தான். அவை யாவற்றையும் இனி இப்பகுதியில் ஒன்றன் பின் ஒன்றாகப் பார்ப்போம்.

۞ 1.1 ۞

இதை ஹிஷாம் இப்னு ஆமிர் ﷺ அறிவிக்கிறார்.

مَا بَيْنَ خَلْقِ آدَمَ إِلَى أَنْ تَقُومَ السَّاعَةُ فِتْنَةٌ أَكْبَرُ مِنْ فِتْنَةِ الدَّجَّالِ

ஆதம் படைக்கப்பட்டதிலிருந்து மறுமைநாள் வரை ஏற்படும் குழப்பங்களில் தஜ்ஜாலைவிடப் பெரிய குழப்பம் எதுவும் இல்லை. *(அஹ்மது 16373)*

இது முஸ்லிம் *(8/207)*, ஹாகிம் *(4/528)*, அஹ்மது *(4/20)* ஆகிய நூல்களில் பதிவாகியுள்ளது.

۞ 1.2 ۞

அப்துல்லாஹ் இப்னு முஃபல் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறியதாக அறிவிக்கிறார்:

مَا أَهْبَطَ اللَّهُ إِلَى الأَرْضِ مُنْذُ خَلَقَ آدَمَ إِلَى أَنْ تَقُومَ السَّاعَةُ فِتْنَةً أَعْظَمَ مِنْ فِتْنَةِ الدَّجَّالِ، وَقَدْ قُلْتُ فِيهِ قَوْلا لَمْ يَقُلْهُ أَحَدٌ قَبْلُ: إِنَّهُ آدَمُ، جَعْدٌ، مَمْسُوحُ عَيْنِ الْيَسَارِ، عَلَى عَيْنِهِ طَفْرَةٌ غَلِيظَةٌ، وَإِنَّهُ يُبْرِئُ الأَكْمَهَ وَالأَبْرَصَ، وَيَقُولُ: أَنَا رَبُّكُمْ، فَمَنْ قَالَ: رَبِّيَ اللَّهُ، فَلا فِتْنَةَ عَلَيْهِ، وَمَنْ قَالَ: أَنْتَ رَبِّي، فَقَدِ افْتُتِنَ، يَلْبَثُ فِيكُمْ مَا شَاءَ اللَّهُ، ثُمَّ يَنْزِلُ عِيسَى ابْنُ مَرْيَمَ مُصَدِّقًا بِمُحَمَّدٍ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ، وَعَلَى مِلَّتِهِ مَاتَ، إِمَامًا مَهْدِيًّا، وَحَكَمًا عَدْلا، فَيَقْتُلُ الدَّجَّالَ

❁ 24.3 ❁

மிஹ்ஜன் இப்னு அல்அத்ரவு ﷺ அறிவிக்கிறார்கள்:

أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ خَطَبَ النَّاسَ فَقَالَ: يَوْمُ الْخَلَاصِ وَمَا يَوْمُ الْخَلَاصِ، يَوْمُ الْخَلَاصِ وَمَا يَوْمُ الْخَلَاصِ ثَلَاثًا، فَقِيلَ لَهُ: وَمَا يَوْمُ الْخَلَاصِ؟ قَالَ: يَجِيءُ الدَّجَّالُ فَيَصْعَدُ أُحُدًا، فَيَنْظُرُ إِلَى الْمَدِينَةَ، فَيَقُولُ لِأَصْحَابِهِ: أَتَرَوْنَ هَذَا الْقَصْرَ الْأَبْيَضَ؟ هَذَا مَسْجِدُ أَحْمَدَ ثُمَّ يَأْتِي الْمَدِينَةَ، فَيَجِدُ بِكُلِّ نَقْبٍ مِنْهَا مَلَكًا مُصْلِتًا، فَيَأْتِي سَبْخَةَ الْحَرْفِ، فَيَضْرِبُ رُوَاقَهُ، ثُمَّ تَرْجُفُ الْمَدِينَةُ ثَلَاثَ رَجَفَاتٍ، فَلَا يَبْقَى مُنَافِقٌ، وَلَا مُنَافِقَةٌ، وَلَا فَاسِقٌ، وَلَا فَاسِقَةٌ، إِلَّا خَرَجَ إِلَيْهِ، فَذَلِكَ يَوْمُ الْخَلَاصِ

அல்லாஹ்வின் தூதர் ﷺ பிரசங்கம் செய்தார்கள். விடுதலை நாள், 'விடுதலை நாள் என்ன? என்று தெரியுமா' என்று மூன்று முறை கேட்டார்கள். 'அதைப்பற்றிச் சொல்லுங்கள்' என்று கேட்கப்பட்டபோது கூறினார்கள்: தஜ்ஜால் வெளிப்பட்டு, உஹுது மலைமீது ஏறி மதீனாவைப் பார்த்துவிட்டு தன் தோழர்களிடம் கூறுவான்: 'இதோ! இந்த வெள்ளைக் கோட்டை உங்களுக்கு தெரிகிறதா? இதுதான் மஸ்ஜிதே அஹ்மது ஆகும்.' பிறகு, அவன் அல்மதீனா வருவான். வாளுடன் உள்ள ஒவ்வொரு மலக்கையும் எதிர்த்து உள்ளே நுழைய முயல்வான். பிறகு உப்புக் கடற்கரைக்கு வருவான். தனது கூடாரத்தை அடிப்பான். அப்போது அல்மதீனா மூன்று முறை குலுங்கும். அப்போது அதிலுள்ள அனைத்து நயவஞ்சக ஆண்களும் பெண்களும், பாவியான ஆண்களும் பெண்களும் அவனை நோக்கிச் சென்றுவிடுவார்கள். அன்றைய நாள்தான் விடுதலை நாள் ஆகும். (அஹ்மது 18975)

❁ 24.4 ❁

ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ﷺ அறிவிக்கிறார்கள்:

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ رَضِيَ اللَّهُ تَعَالَى عَنْهُمَا قَالَ أَشْرَفَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلَى فَلَقٍ مِنْ أَفْلَاقِ الْحَرَّةِ وَنَحْنُ مَعَهُ فَقَالَ نِعْمَتِ الْأَرْضُ الْمَدِينَةُ إِذَا خَرَجَ الدَّجَّالُ عَلَى كُلِّ نَقْبٍ مِنْ أَنْقَابِهَا مَلَكٌ لَا يَدْخُلُهَا فَإِذَا كَانَ كَذَلِكَ رَجَفَتْ الْمَدِينَةُ بِأَهْلِهَا ثَلَاثَ رَجَفَاتٍ لَا يَبْقَى مُنَافِقٌ وَلَا مُنَافِقَةٌ إِلَّا خَرَجَ إِلَيْهِ وَأَكْثَرُ يَعْنِي مَنْ يَخْرُجُ إِلَيْهِ النِّسَاءُ وَذَلِكَ يَوْمُ التَّخْلِيصِ وَذَلِكَ يَوْمَ تَنْفِي الْمَدِينَةُ الْخَبَثَ كَمَا يَنْفِي الْكِيرُ خَبَثَ الْحَدِيدِ يَكُونُ مَعَهُ

۞ 1 ۞

தஜ்ஜாலைப்பற்றி நபியவர்களின் நீண்ட நேரப் பேச்சு

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ : كُنَّا نَتَحَدَّثُ بِحَجَّةِ الْوَدَاعِ وَالنَّبِيُّ صلى الله عليه وسلم بَـيْنَ أَظْهُرِنَـا ، وَلاَ نَدْرِي مَا حَجَّةُ الْوَدَاعِ فَحَمِدَ اللَّهَ وَأَثْنَى عَلَيْهِ ثُمَّ ذَكَرَ الْمَسِـيحَ الدَّجَّالَ فَأَطْنَبَ فِي ذِكْرِهِ وَقَالَ مَا بَعَثَ اللَّهُ مِنْ نَبِيٍّ إِلاَّ أَنْذَرَ أُمَّتَهُ أَنْذَرَهُ نُوحٌ وَالنَّبِيُّونَ مِنْ بَعْدِهِ وَإِنَّهُ يَخْـرُجُ فِيكُمْ فَمَا خَفِيَ عَلَيْكُمْ مِنْ شَـأْنِهِ فَلَيْسَ يَخْفَى عَلَيْكُـمْ أَنَّ رَبَّكُمْ لَيْسَ عَلَى مَا يَخْفَى عَلَيْكُمْ ثَلاَثًا إِنَّ رَبَّكُمْ لَيْسَ بِأَعْوَرَ وَإِنَّهُ أَعْوَرُ عَيْنِ الْيُمْنَى كَأَنَّ عَيْنَهُ عِنَبَةٌ طَافِيَةٌ.

இப்னு உமர் ﷺ அவர்கள் கூறியதாவது: நாங்கள் நபி ﷺ அவர்கள் எங்களிடையே இருக்க, ஹஜ்ஜத்துல் வதாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். நபி ﷺ அவர்கள் இறக்கும் வரை ஹஜ்ஜத்துல் வதா (விடைபெறும் ஹஜ்ஜு) என்பதன் கருத்தென்ன என்று எங்களுக்குத் தெரியாது. இந்நிலையில், நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்து போற்றி, (பிற்காலத்தில் தோன்றும் மகா பொய்யனான) அல்மஸீஹுத் தஜ்ஜாலைப் பற்றிக் கூறத் தொடங்கி, நீண்ட நேரம் அவனைப் பற்றியே சொன்னார்கள். அப்போது, 'அல்லாஹ் அனுப்பிய எந்த இறைத்தூதரும் (அவனைப் பற்றித்) தம் சமுதாயத்தாரை எச்சரிக்காமல் இருந்ததில்லை. (இறைத்தூதர்) நூஹ் ﷺ அவர்கள் (தம் சமுதாயத்தாருக்கு) அவனைப்பற்றி எச்சரித்தார்கள். அவர்களுக்குப் பின்னால் வருகை தந்த இறைத்தூதர்களும் (அவனைப்பற்றித் தத்தம் சமுதாயத்தாருக்கு) எச்சரித்தனர். மேலும், (என் சமுதாயத்தினரான) உங்களிடையேதான் (இறுதிக் காலத்தில்) அவன் தோன்றுவான். அவனது (அடையாளத்) தன்மைகளில் ஏதேனும் சில உங்களுக்குப் புலப்படாமல் போனாலும், நிச்சயமாக உங்களுடைய இறைவன் உங்களுக்குத் தெரியாதவனல்ல என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும் - இதை மும்முறை கூறினார்கள் - உங்கள் இறைவன் ஒற்றைக் கண்ணன் அல்ல. அவனோ (தஜ்ஜாலோ) வலது கண் குருடானவன். அவனது கண் (ஒரே குலையில்) துருத்திக் கொண்டிருக்கும் திராட்சை போன்றிருக்கும். (புகாரீ 4402)

۞ 2 ۞

மூன்று முக்கிய அடையாளங்கள்

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:

ثَلاَثٌ إِذَا خَرَجْنَ لاَ يَنْفَعُ نَفْسًا إِيمَانُهَا لَمْ تَكُنْ آمَنَتْ مِنْ قَبْلُ أَوْ كَسَبَتْ فِي إِيمَانِهَا خَيْرًا طُلُوعُ الشَّمْسِ مِنْ مَغْرِبِهَا وَالدَّجَّالُ وَدَابَّةُ الأَرْضِ

மூன்று அடையாளங்கள் தோன்றிவிட்டால் முன்பே இறைநம்பிக்கை கொண்டிராத, அல்லது இறைநம்பிக்கை கொண்டிருந்தாலும் நன்மையேதும் செய்திராத எந்த மனிதருக்கும் அந்த நேரத்தில் கொள்ளும் இறைநம்பிக்கை பயனளிக்காது. (அவை:)

1. மேற்கிலிருந்து சூரியன் உதயமாகுதல்.
2. தஜ்ஜால் (தோன்றுதல்).
3. பூமியிலிருந்து வெளிப்படும் பிராணி. (முஸ்லிம் 249)

۞ 3 ۞

நபியவர்களுக்கு தஜ்ஜால் காட்டப்பட்டான்

عَنْ قَتَادَةَ عَنْ أَبِي الْعَالِيَةِ حَدَّثَنَا ابْنُ عَمِّ نَبِيِّكُمْ -صلى الله عليه وسلم- ابْنُ عَبَّاسٍ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ -صلى الله عليه وسلم- « مَرَرْتُ لَيْلَةَ أُسْرِىَ بِى عَلَى مُوسَى بْنِ عِمْرَانَ - عَلَيْهِ السَّلاَمُ - رَجُلٌ آدَمُ طُوَالٌ جَعْدٌ كَأَنَّهُ مِنْ رِجَالِ شَنُوءَةَ وَرَأَيْتُ عِيسَى ابْنَ مَرْيَمَ مَرْبُوعَ الْخَلْقِ إِلَى الْحُمْرَةِ وَالْبَيَاضِ سَبِطَ الرَّأْسِ ». وَأُرِىَ مَالِكًا خَازِنَ النَّارِ وَالدَّجَّالَ. فِى آيَاتٍ أَرَاهُنَّ اللَّهُ إِيَّاهُ فَلاَ تَكُنْ فِى مِرْيَةٍ مِنْ لِقَائِهِ. قَالَ كَانَ قَتَادَةُ يُفَسِّرُهَا أَنَّ نَبِىَّ اللَّهِ -صلى الله عليه وسلم- قَدْ لَقِىَ مُوسَى عَلَيْهِ السَّلاَمُ.

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்: நான் (விண்ணுலகப் பயணத்திற்காக) அழைத்துச்செல்லப்பட்ட இரவில் இம்ரானின் புதல்வர் மூசா ﷺ அவர்களைக் கடந்துசென்றேன். மூசா ﷺ அவர்கள் (யமனியர்களான) 'ஷனூஆ' குலத்தைச் சேர்ந்த மனிதரைப் போன்று மாநிறமுடையவர்கள்; உயரமானவர்கள்; சுருள்முடியுடைவர்கள். (அப்பயணத்தில்) மர்யமின் மைந்தர் ஈஸா ﷺ அவர்களையும் கண்டேன். அவர்கள் நடுத்தர உயரமும் சிவப்பும் வெண்மையும் கலந்த, மிதமான சரும அமைப்புக் கொண்டவர்களாகவும் படிந்த, தொங்கலான தலைமுடி உடையவர்களாகவும் இருந்தார்கள்.